பாம் பிரிண்ட்
சுவடி
SUVADI
ஏடு 1 ஓலை 7



'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!
நியாயமான விலை!
உறுதியளித்த நேரத்தில்!

பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்
416.284.9545
palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8

# கண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா!
## செந்நீரால் காத்தோம், கருகத் திருவுளமோ?



அட, நாங்கள் ஒன்றும் எங்கள் போராட்டம் பற்றிப் பேசவில்லை. இந்த மாதம் கொல்லைப்புறத் தோட்டத்தில் நின்று இந்தப் பாடலைத் தான் பாடப் போகிறீர்கள். கோடை முழுவதும் நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த, அயராது உழைத்த உழைப்பு ஒரே இரவில், வாடி வதங்கப் போகிறது.

முதன் முதலாக, வெப்பநிலை பூச்சியத்துக்கு அருகில் போக, புற்களின் மேல் தேங்காய்ப்பூ கொட்டிய கணக்கில், மெல்லிய உறைபனி வரும். ஆசையோடு வளர்த்த புடலங்கன்று முதல் மிளகாய் வரைக்குமான கோடை காலப் பயிர்கள் சுடுநீர் ஊற்றியது போல வெந்திருக்கும். அதற்கான விஞ்ஞான விளக்கம் பின்னால் எப்போதாவது!

வெப்பநிலை நான்கு பாகை சதம நிலைக்கு கிட்டும் போது, அல்லது பத்துப் பாகைக்கு கீழே இருக்கும் போது, குளிர் காற்று வீசினால், மரக்கறிக் கன்றுகள் ஒரே இரவில் உயிரை விடும். குளிர் காலநிலைக்கான தடித்த இலை கொண்ட கோவா, கேல், கொலாட், சலாட் இலைகள், லீக்ஸ், பீட்ரூட் போன்றன இந்தக் குளிருக்கு தாக்குப் பிடிக்கக் கூடியன. கொட்டும் பனிக்குள் நின்று, அடுத்த வருடம் பனி நீங்க உயிர் பெறக் கூடியன. நம்ம மிளகாய், கத்தரி, தக்காளி போன்றனவற்றின் ஆயுள் முதலாம் உறைபனியோடு முடிந்து விடும்.

எத்தனையோ தியாகம் செய்து, நடாத்திய போராட்டம்... சே... உழைப்பு வீணாய் போகாமல் இருக்க...முதலில் எதற்கும் முடிந்தவரைக்கும் முற்றிய காய்கறிகளைப் பறித்து பயன்படுத்துங்கள். பிஞ்சுகளைக் கூட நீங்கள் பயன்படுத்தலாம். எஞ்சியவற்றைக் குளிரூட்டியில் சேமியுங்கள்.

வீட்டுக்குள் வைத்துப் பராமரிக்கக் கூடியதாக, மிளகாய் போன்றவற்றைக் கிளப்பி, சாடிக்குள் வைத்து வீட்டுக்குள் கொண்டு வாருங்கள். அதற்காக முழுத் தோட்டத்தையும் அல்ல! ஒன்றிரண்டு போதும். குளிர்காலம் முழுவதும் மிளகாய் கிடைக்கும்.

தக்காளியை காய்களுடன் பிடுங்கி, நிலக்கீழ் அறையில் தலைகீழாகக் கட்டித் தொங்க விடுங்கள். அது தானாகவே பழுத்து வரப் பயன்படுத்தலாம்.

எதற்கும் அடிக்கடி தொலைக்காட்சி காலநிலை அறிவிப்புகளை அவதானியுங்கள். என்றாவது உறைபனி (Frost) என்று தெரிவித்தால், நடவடிக்கைக்கு தயாராகுங்கள்.

பெரும்பாலும் ஒரு நாள் உறைபனியின் பின்னால், வெப்பநிலை அதிகரித்து நீண்ட நாட்களுக்கு நல்ல காலநிலை இருக்கும். எனவே, உறைபனி நாளன்று, இலைகளுக்கு தண்ணீரால் விசிறி, ஒளி புகக் கூடிய பிளாஸ்டிக் சீட்களால் மூடி விடுங்கள். மறுநாள் வெப்பநிலையைப் பார்த்து, அவற்றை எடுத்து விடுங்கள்.

இப்படியாகத் தானே...

எங்களுக்குப் பயன்படாதது வேறு யாருக்கும் பயன்படக் கூடாது என்ற எண்ணத்தோடு எல்லாவற்றையும் அழிக்காமல், விளைபொருட்களை உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எங்களுக்குப் பயன்படாதது வேறு யாருக்கும் பயன்படக் கூடாது என்ற எண்ணத்தோடு எல்லா வற்றையும் அழிக்காமல், விளை பொருட்களை உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# லெப்டினன்ட் கேணல்களின் ஆங்கிலம்

சில நேரங்களில் எங்காவது கண்டு கேட்டறியா ஆங்கிலச் சொற்களைக் கண்டிருப்பீர்கள். ஆனால் அதை எப்படி உச்சரிப்பது என்று தெரியாமல் இருக்கும். எழுத்திலிருப்பதை விசயம் தெரியாமல் வேறு மாதிரி உச்சரித்தால் கருத்து வேறு மாதிரிப் போகவும் கூடும். அதிலும் ஒரே சொல்லை, லெப்டினன்ட் கேணல், பிரிட்டிஷ்காரன் ஒரு மாதிரியும் அமெரிக்காக்காரன் வேறு மாதிரியும் உச்சரிக்கும் விசயம் தெரிந்தால், 'உந்தத் தலையிடியால தான் நான் இங்கிலிஷ் படிக்காமல்

மறுபக்கம்...

பிரஜா உரிமை
வதிவிட உரிமை
பத்திரங்கள் நிரப்புதல்
ஆவண மொழிபெயர்ப்பு
Passport Forms
416.269.5883
Citizenship
PR Forms
Sponsorship Forms
Translation Services

லெப்டினனட் கேணல்...

விட்டனான். கனடாவில தமிழ் ஆக்கள் எலக்ஷன் கேக்கிறதுக்கே இங்கிலிஷ் தேவையில்லை, வெல்பெயர் எடுக்கிற எனக்கு என்னத்துக்கு எனக்கு இங்கிலிஷ்?' என்று நீங்கள் ஞாயம் பேசக் கூடும். உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பித்தாலும், நம் நாட்டின் கல்வி முறையால், பலரும் ஆங்கிலத்தை, சொற்களை இலக்கண விதிகளை கண்டபடி மீறிப் பொருத்தியே பேசுகிறார்கள்.

சரி, ஆர்வ மிகுதியால் உங்களுக்கு சொற்களின் சரியான உச்சரிப்பை அறிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றினால் அதற்கான இணையத் தளம் உண்டு.

ஆங்கில அகராதிகளின் மூல கர்த்தாவான ஒக்ஸ்போர்ட் அகராதியின் இணையத் தளம் தான் அது.

http://www.oxfordlearnersdictionaries.com க்குச் சென்று, நீங்கள் உச்சரிப்புத் தேடும் சொல்லை அதில் தேடுங்கள். அங்கே மேல் பகுதியில் ஸ்பீக்கர் குறியுடன் BrE, NAmE என்று பிரிட்டிஷ் ஆங்கிலம், வட அமெரிக்க ஆங்கிலம் என இரண்டு வகை உச்சரிப்புகளும் இருக்கும். அந்த ஸ்பீக்கர் குறியில் அழுத்தும் போது, அதன் உச்சரிப்பு ஒலிக்கும்.

வந்தமா, உச்சரிப்பைக் கேட்டமா என்றில்லாமல், அந்தச் சொல்லின் தெளிவான கருத்துடன், அந்தச் சொல் பயன்படும் விதங்கள் பற்றி விலாவாரியான விளக்கங்களும் இருக்கும். அவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள்.

சில நேரம் ஆங்கிலத்தில் உங்களுக்கு பாண்டித்தியம் வந்து, 'அட, எனக்கு இப்ப நல்லா இங்கிலிஷ் தெரியும்' என்று எலக்ஷனில் நின்று கனடாவின் மேதகு தேசியத் தலைவராகும், அது தான் பிரதமராகும், கனவில் மிதக்காதீர்கள். அதற்கு பிரெஞ்சு மொழியும் தெரியவேண்டும். (கவலை வேண்டாம். சுலபமாய் பிரெஞ்சு மொழி கற்பதற்கான வழியையும் அடுத்த சுவடிகளில் சொல்லித் தருவோம்.) ■

# விடுமுறைக் கொடுப்பனவு

## தொழிலிட உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஒன்ராறியோவில் வேலை செய்வோருக்கு, தொழிலிடங்களில் சட்ட பூர்வமாய் வழங்கப்படும் விடுமுறை பற்றியும் அதற்கான கொடுப்பனவு பற்றியும் பலருக்குத் தெரியாமல் இருக்கக் கூடும். ஒன்ராறியோ சட்டப்படி விடுமுறை வேறு (Vacation Time), விடுமுறைக் கொடுப்பனவு (Vacation Pay) வேறு.

வங்கிகள், விமானசேவை நிறுவனங்களில் பணியாற்றுவோர், பயிற்சிக்காக வேலை செய்யும் மாணவர்கள் போன்றவர்கள் தவிர்ந்த மற்ற சாதாரண வேலையாட்களுக்கு ஒரு வருடம் முழுமையான வேலை செய்த பின்னால் வருடாந்தம் இரண்டு கிழமைகள் விடுமுறை (Vacation Time) வழங்கப்பட வேண்டும். உங்கள் வேலை இடத்தில் தொழிற் சங்கம் (யூனியன்) உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினால், அது நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தப்படி சில நேரம் உங்களுக்கு அதை விட அதிகமான விடுமுறையும் வழங்கப்படலாம். நீண்ட காலத் தொழிலாளிகளை தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக நிறுவனமே அதிகளவு விடுமுறையை வழங்கலாம்.

அந்த விடுமுறை காலத்தில், கடந்த வருடத்தில் உங்கள் மொத்த வருமானத்தின் நான்கு வீதம் விடுமுறைப் பணமாக (Vacation Pay) வழங்கப்பட வேண்டும். 52 வாரங்கள் கொண்ட வருடத்தில் 40 மணி நேர வார வேலைப்படி, வருடாந்தம் வரும் 2000 மணிகளுக்கு நான்கு வீதமாக கிடைக்கும் 80 மணிகள் இரண்டு வாரங்களாகும்.

வழமையான மணி நேரச் சம்பளத்தை விட, மேலதிக நேர வேலை, விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவு, போனஸ் போன்றவற்றை உள்ளடக்கி நான்கு வீதம் கணக்கிடப்படும்.

விடுமுறை எப்போது வழங்கப்பட வேண்டும் என்பதை நிறுவனமே முடிவு செய்யும். சில நேரங்களில் விடுமுறைக்காக முழு நிறுவனத்தையும் நிர்வாகம் மூடி வேலையாட்கள் அனைவருக்கும், குறிப்பாக கிறிஸ்மஸ் காலத்தில், விடுமுறை வழங்கலாம். சில நேரங்களில் வேலை குறைந்த நாட்களில் உங்கள் விடுமுறையை எடுக்கும்படி நிறுவனம் வற்புறுத்தலாம். வேலை கூடிய நாட்களில் விடுமுறை தர மறுக்கலாம்.

ஆனால் இரண்டு வாரங்களை ஒன்றாகவோ, அல்லது ஒவ்வாரு வாரமாகவோ விடுமுறையை வழங்க வேண்டும். விடுமுறையை முடிவு செய்வது நிறுவனமாக இருந்தாலும், வேலையாட்களை ஒவ்வொரு நாட்களாக எடுக்கும்படி வற்புறுத்த முடியாது.

நீங்கள் விரும்பினால், வருடத்தில் எப்பகுதியிலாவது நிறுவனத்தின் சம்மதத்துடன் அந்த விடுமுறையைப் பெறலாம். நீங்கள் விரும்பினால், ஒவ்வொரு நாளாக, நீண்ட வார இறுதிகளில் இன்னொரு நாளை விடுமுறை தினமாக்கி, நீண்ட ஓய்வு பெறலாம்.

உங்கள் விடுமுறை நாளில் அரச பொதுவிடுமுறை நாள் வந்தால், அடுத்த மூன்று மாதத்திற்குள் அல்லது எழுத்து மூலமாயின் ஒரு வருடத்திற்குள் சம்பளத்துடனான ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். அந்த விடுமுறை நாளுக்குப் பதிலாக சம்பளத்தைத் தரும்படியும் கேட்கலாம்.

பிரசவ விடுமுறை, புதிய பெற்றோருக்கான விடுமுறை போன்ற விடுமுறைகளில் இருந்தாலும் வருடாந்த இரு வார விடுமுறை வழங்கப்பட வேண்டும். ஆனால் அந்தக் காலங்களில் வருமானம் குறைவாக இருப்பதால், அதற்கான விடுமுறைக் கொடுப்பனவு குறைவாகவே இருக்கும்.

வேலை செய்யும் வருடம் முடிந்த பின்னால் பத்து மாதங்களுக்குள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். ஒரு வருடத்திற்கான விடுமுறையைப் பயன்படுத்த முடியாது போனால், வருட முடிவின் பத்து மாதங்களுக்குள் அந்த விடுமுறையைப் பயன்படுத்த நிர்வாகம் அனுமதிக்க வேண்டும். ஆனால், அடிப்படை இரண்டு வாரங்களை விட அதிகமாக விடுமுறை பெறுவோர், பயன்படுத்தா விட்டால், இரண்டு வாரங்களுக்கு அதிகமான மீதி வாரங்களை இழக்க நேரிடலாம்.

நீங்கள் தற்காலிக வேலை செய்பவராயின், உங்களுக்கு வேலை வாங்கித் தரும் முகவர் (Temporary Agency) உங்களுக்கு நான்கு வீத சம்பளத்தை வருட முடிவில் விடுமுறைப் பணமாகத் தர வேண்டும்.

நீங்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அதுவரையும் சம்பாதித்த தொகையின் நான்கு வீத விடுமுறைப் பணம் உங்களுக்குத் தரப்பட வேண்டும்.

ஒரு வீட்டை மாளிகையாக்குவது
தளபாடங்களே!
உங்கள் வீட்டை
மலிவு விலையில் மாளிகையாக்க...
Sunflowers
furniture
3024 Kennedy Rd
416.609.8556

பண நெருக்கடியாலோ, 'லீவு எடுத்தால், வீட்டில உந்த அறுவான்ரை தொல்லை தாங்கேலாது, மனிசரை சும்மா இருக்க விடான்' என்று விடுமுறை எடுக்க விரும்பாமலோ இருந்தால், உங்கள் நிறுவனத்தின் எழுத்து மூலமான அனுமதியுடன், அரசாங்கத்தின் Director of Employment Standards இன் அனுமதியுடன் பணமாகப் பெறலாம்.

உங்களுக்கு விடுமுறையாகத் தரும் இரு வாரங்களிலும் வழமையான சம்பளம் வழங்கப்படும். சில நேரம் மேலதிக வேலை காரணமாக நீங்கள் அதிகமாய் சம்பாதித்து, அதன் நான்கு வீதம் இரண்டு வார கொடுப்பனவை விட அதிகமாயிருந்தால், அந்த மீதித் தொகையை நிறுவனம் உங்களுக்குச் செலுத்த வேண்டும்.

எனவே உங்கள் தொழில் உரிமைகளைத் தெரிந்து கொண்டால், மானத்துடன் வேலை செய்வது மட்டுமன்றி, உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை நிறுவனங்கள் தராமல் ஏமாற்றுவதையும் தவிர்க்கலாம்.

பதிவு செய்யாமல் தமிழ் மகன் நிர்வாக நிறுவனங்களில் கைக் காசுக்கு வேலை செய்வோருக்கு இந்த விதிமுறைகள் செல்லுபடியாகாது என்பதை மனதில் கொள்ளுங்கள்.

# கூடி முயங்க வழி செய்யும் செல்பேசி

## செல்பேசி பட்டரியின் சக்தி நீடிக்க சில வழிகள்

செல்பேசி கையில் இருந்தால், நினைத்த போழ்தில் எல்லாம் மனதுக்கு இனியாரோடு அடிக்கடி குறுஞ் செய்திப் பரிமாற்றம் செய்யலாம். பொழுது போகாவிட்டால், முகப்புத்தகத்தில் பதிவு செய்வோருக்கு எல்லாம், நானும் 'உள்ளேன் ஐயா' என்று லைக் செய்யலாம். ஆனால் அதன் பட்டரி செயலிழந்து விட்டால்... மரத்தில் மாங்காய் எறியக் கூட பயன்தராது. பட்டரியில் உயிர் இருக்கும் வரைக்கும் தான் செல்பேசியின் வீரியம். அதிலும் மீண்டும் உயிரூட்டுவதற்கு மின் இணைப்புகள் அருகில் இல்லாவிட்டால் அதோ கதி தான்.

வழமையில் ஒரு தடவை முழுமையாக உயிரூட்டினால், செல்பேசி ஒரு நாளைக்குத் தாக்குப் பிடிக்கும். அது சாதாரண பாவனைக்கு! சதா முகம் புதைத்தால்...?

உங்கள் செல்போன் பட்டரியை நீடிய பாவனைக்கு பயன்படுத்த இதோ சில வழிகள்!

உங்கள் திரையின் பிரகாசத்தன்மையைக் (Brightness) குறையுங்கள். உங்கள் செல்பேசியில் Settings என்பதில் Displayஅல்லது Display ஐ அழுத்தி, கண்ணை பாதிக்காமல், வாசிக்கக் கூடிய அளவுக்கு மங்கலாக வைத்திருங்கள். சுற்றாடல் வெளிச்சத்தைக் கணித்து அதன்படி பிரகாசத்தை மாற்றுவதற்கான, Auto Brightness என்பதை தெரிவு செய்யாதீர்கள்.

அத்துடன் பயன்படுத்தி முடிந்த பின்னால், சிறிது நேரத்தில் தன்பாட்டிலேயே திரையை மூடி நித்திரை செய்வதற்காக Sleep அல்லது Screen Timeout என்பதைத் தெரிந்து, அதற்கான குறுகிய நேரத்தையும் தெரிவு செய்யுங்கள். ஐபோன் பிரியர்கள் Settings ல் General ஐ தெரிந்து Auto-Lock ஐ தெரியுங்கள்.

2. காதில் கொழுவிக் கேட்கும் கருவிக்கான Bluetooth, இணையத் தொடர்புக்கான Wi-Fi, பாதை காட்டும் GPS போன்றவற்றைப் பயன்படுத்தாத நேரங்களில் மூடுங்கள். Settings ல் இவற்றை மாற்றலாம். பெரும்பாலான செல்பேசிகளில் வழமையான Home திரையிலேயே மாற்றங்களைச் செய்யலாம்.

3. உங்கள் செல்பேசிக்கான செயலிகளை தரவிறக்கம் செய்யும் போது, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை அறியும் Location Based செயற்பாடுகள் பட்டரியின் உயிரை வேகமாய் குடிக்கும். எனவே தரவிறக்கம் செய்யும்போது, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைக் கட்டாயமாய் அறிய வேண்டிய GPS போன்றன தவிர்த்து, தேவையற்ற செயலிகள் GPS ஐ பயன்படுத்துவதைத் தவிருங்கள். தேவையெனின், Location Access ஐ Settings மூலமாகத் தவிருங்கள்.

4. உங்கள் செல்பேசி இணைப்பின் வலிமை குறைவாக இருக்கிறதா என்பதை அவதானியுங்கள். குறிப்பாக செல்பேசி சேவை இல்லாத இடங்களில் இருந்தால், உங்கள் செல்பேசி அடிக்கடி இணைப்பைத் தேடுவதால் சக்தி விரயமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், வலிமையான இணைப்புக் கிடைக்கும்வரை Airplane mode ஐ பயன்படுத்துங்கள்.

5. Wi-Fi இணைப்பானது, செல்பேசி நிறுவன இணைப்பை விட குறைந்தளவு சக்தியைப் பயன்படுத்துவதுடன், அதன் மூலம் தரவுகள் வேகமாகப் பரிமாறலாம்.

6. புதிதாக வரும் மின்னோலைகள், முகப் புத்தகத்தில் நண்பராக விரும்புவோரின் வேண்டுகோள்கள் போன்றவற்றை உங்களுக்குத் தெரியப் படுத்துவதற்கு உங்கள் செல்பேசி அடிக்கடி அந்த சேவைகளுடன் தொடர்பு கொண்டு சக்தியை விரயமாக்கும். எனவே முக்கியமில்லாத செயலிகளில் notifications ஐ தவிருங்கள்.

7. பயன்படுத்தாத செயலிகளை மூடுங்கள். இல்லாவிடில் அவை பின்னணியில் செயற்பட்டுக் கொண்டே இருந்து, சக்தியை விரயமாக்கும். ஐபோன் பிரியர்கள் Settings ல் General ல் Background App Refresh ஐ தெரிவு செய்யலாம். அன்ட்ரோய்ட் அபிமானிகள் Settings ல் Data Usage ல் Restrict background data ஐ தெரியலாம்.

8. செல்பேசிகள் கடும் குளிரிலும் வெப்பத்திலும் வேகமாய் சக்தியை இழக்கும். இந்த வெப்பநிலைகளில் அவற்றின் பட்டரிகள் இரசாயனத் தாக்கத்திற்குட்படுவதாலேயே இந்தச் சக்தி இழப்பு. இந்த வெப்பநிலைகளைத் தவிருங்கள்.

9. நீண்ட நேரம் மின் இணைப்பு இல்லாத சூழ்நிலைகளில், மேலதிகமாய் பட்டரிகள் வாங்கி உயிரூட்டிப் பயன்படுத்தலாம். ஆனால் ஐபோன் பிரியர்களுக்கு பட்டரி கழற்றி மாற்ற வழி கிடையாது. USB மூலமாக சக்தியூட்டுவதற்காக, மேலதிக சக்தி தரும் பட்டரிகள் கடைகளில் உண்டு. அவற்றை USB மூலமாக இணைத்து சக்தி பெறலாம்.

இந்த வகைகளில் சேமித்த சக்தியை என்ன செய்வது? செல்பேசி மூலமாய் மனதுக்கு இனியாரோடு 'என்ன எடுக்கிறன், எடுக்கிறன், ஆன்ஸர் பண்ணிறாயில்லை' என்று ஊடல் கொள்ள வேண்டியது தான்.

சில நேரம் வீடு சேரும்போது, கூடி முயங்கவும் (அல்லது வாங்கிக் கட்டவும்!) வழி கிடைக்கலாம்.


வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!
Leo Swampillai
Sales Representative
Homelife/Future
Realty Inc.Brokerage*
Bus:905.201.9977
416.347.8732
leo33@rogers.com

# வீட்டுக்குள் தஞ்சம் கோரும் தாவரங்கள்

கோடை மறைந்தால் இன்பம் வரும் என்று பாடியவர்கள் கனடாப் பக்கம் கால் வைக்கவில்லை. கோடை மறைந்து குளிர் வரத் தொடங்க ஒரே துன்ப மயம் தான். பச்சைப் பசேல் என்று செழித்து நின்ற மரக்கறிகளையும் பூக்கன்றுகளையும் கண்டு இன்புற்ற கொல்லைப்புறக் கமக்காரர்கள் கோடை மறைந்து குளிர் வந்து கண் முன்னாலேயே அவை வாடி வதங்கும் போது துன்புற்று...

வீட்டுக்குள் இருந்த பூக்கன்றுகளையும் மூலிகைகளையும் கோடையில் வெளியே வைத்து தெருவில் போவோருக்கு அழகு காட்டியிருப்பீர்கள். குளிரிலும் சீன் காட்டப் புறப்பட்டால், கறிவேப்பிலைகளும் துளசிகளும் முதல் நாள் உறைகுளிரில் உயிரை விடக் கூடும். எனவே திரும்பவும் அவற்றை வீட்டுக்குள்ளே கொண்டு வந்து குளிரிலிருந்து பாதுகாப்புக் கொடுக்கும் காலம் நெருங்கி விட்டது.

அவற்றை இப்போதே உள்ளே கொண்டு வரலாம். அதற்காக சும்மா அப்படியே உள்ளே கொண்டு வந்தால், உடம்பெல்லாம் ஊர்ந்து சில்மிசம் பண்ணும் கண் காணா உயிரினங்களும், நத்தைகளும் அவற்றுடன் உள்ளே வந்து தஞ்சம் கோரலாம்.

எனவே, அவற்றைக் கொண்டு வருவதற்கு முன்னால் தாவரங்களுக்குச் சிகையலங்காரம் செய்யுங்கள். அதாவது இறந்து போன இலைகள், கிளைகளை கூரான கத்திகளால் வெட்டி அகற்றுங்கள். பின்னர் பெரிய வாளி ஒன்றில் தண்ணீர் நிறைத்து, அவற்றை முழுமையாக மூழ்கடியுங்கள். அவற்றில் தொங்கிக் கொண்ட பூச்சிகள் எல்லாம் மூச்சுப் பிடிக்க முடியாமல் திணறி மேலே வரும். மண்ணில் நீர் நிறையும் போது வாயுக்குமிழ்கள் வெளியே வரும். முழுமையாக வாயுக் குமிழ்கள் வருவது நின்ற பின்னால் வெளியே தூக்கி வைத்து, நீரை வடிய விடுங்கள். வடிந்த பின்னால், பெரும் பெட்டிக் கடைகளில் விற்பனையாகும் கிருமி கொல்லும் சவர்க்காரக் கரைசலை, (Insecticide soap) முழுமையான தாவரத்திலும், குறிப்பாக இலைகளின் அடிப்புறமும் விசிறுங்கள்.

இதன் பின்னால் தான் உங்கள் கன்றுகளுக்கு கிரகப்பிரவேசம் செய்யுங்கள்.

## இலவசம்

கோடை மறைந்து துன்பம் வரும் முன்னால், எங்களிடம் உள்ள கொடி மல்லிகை, துளசி, முடக்கொத்தான், கறிவேப்பிலை, பசளி, கற்பூரவள்ளி, அறுகு போன்ற வீட்டுத் தாவரங்களை வாங்குவோருக்கு, உறைபனி கொட்டும் குளிரில் உங்கள் வீட்டுத் தாவரங்கள் காய்ந்து இறந்து போகாமல் காப்பதற்கான தொழில் இரகசியங்கள் பற்றிய கேள்விகளுக்கான பதில்கள் முற்றிலும் இலவசம். ('கற்பூரவள்ளியில ஒரு துண்டு முறிச்சுத் தர மாட்டீங்களோ?' என்ற கேள்வி தவிர!)

# பொறுப்புள்ள பார்த்தசாரதியாகி விபத்துக்களைத் தவிருங்கள் - 2

வாகனம் செலுத்தும் போது அடிக்கடி கண்களை சுழற்றிப் பாருங்கள். ஒரேயடியாய் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால், சூழ வர இருப்பவை பற்றித் தெரியாமல் மறந்து போகும். ஒவ்வொரு இரண்டு செக்கன்களுக்கும் பார்வையை திருப்புங்கள்.

பின் கண்ணாடி, பக்கக் கண்ணாடிகளை ஒவ்வொரு ஆறு செக்கண்டுகளுக்கும் கவனியுங்கள். வேகத்தைக் குறைக்கும் போது, பாதையை மாற்றும்போது, திரும்பும்போது, நிறுத்தும்போது, இறங்கும்போது, எல்லாம் இந்தக் கண்ணாடிகளைக் கவனியுங்கள்.

நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களைக் கடக்கும்போதும் அவதானமாயிருங்கள். சில நேரம் உள்ளேயிருப்பவர்கள் எதிர்பாராத விதமாகக் கதவைத் திறக்கக் கூடும்.

வாகனங்களை நிறுத்தும்போது, மீண்டும் புறப்படும் போது நேரடியாகப் புறப்படக் கூடியதாக றிவேர்ஸ் செய்து பின்புறமாய் நிறுத்துங்கள். அல்லது ஒரு தரிப்பிடத்தைக் கடந்து அதன் மறுபுறத்தில் நிறுத்துங்கள். நேரடியாக புறப்படும்போது, எதிரில் வரும் வாகனங்களையும் ஆட்களையும் கவனிப்பது சுலபம். பின்புறமாய் புறப்படும்போது, சில நேரங்களில் அவை தெரியாமல் போகலாம்.

மிகப் பெரிய வாகனங்களின் அருகில் போகும்போது மிகவும் கவனமாய் இருங்கள். பெரிய வாகனங்கள் நிறுத்து நிலைக்கு வர நீண்டநேரம் எடுக்கும் என்பதுடன், அவற்றினால் ஏற்படும் பாதிப்புகள் ஆபத்தானவை.

உங்களுக்குப் பின்னால் ஓட்டிக் கொண்டு யாராவது வந்தால், நீங்கள் வேகம் பிடிக்கத் தேவையில்லை. வேகத்தைக் குறையுங்கள். அவசரப்படுபவர்கள் உங்களைக் கடந்து (சிவலோகத்திற்கும்!) போவார்கள்.

பாகம் 3 அடுத்த இதழில்

Palm Print Inc
Design & Print
படம் பதித்த
• கோப்பைகள் • ரீசேட்டுகள்
• Copy • Print
• Signs
• Logo Design • Ad Design
Palm Print
416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com



'பின்' குறிப்பு

பாதுகாப்பு உறையுடன் மஞ்சள் பத்திரிகையாக வெளிவந்த கடந்த சுவடி இதழுக்குப் பாராட்டுக்கள் நிறைந்ததில் என்ன ஆச்சரியம்? வழமை போல பயன்தரு விடயங்கள் மட்டுமே நிறைந்த சுவடி, கனடிய தொழிலிடங்களில் தொழிலாளர்களுக்கான உரிமைகள் பற்றிய விடயங்களையும் இம்முறை தாங்கி வருகிறது.

நம்மவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய எத்தனையோ விடயங்கள் தயாராக உள்ளன. ஆனால் கடுகு அளவில் காரத்துடன் வரும் பிரசுரத்தில் குறித்தளவு விடயங்களையே உள்ளடக்க முடியும்.

சுவடியின் வளர்ச்சிக்கு நீங்கள் உதவும் பட்சத்தில், பக்கங்களையும் விடயங்களையும், ஏன், பிரசுர தினங்களையும் அதிகரிக்க முடியும். விளம்பரமாகவோ, இணைப்புப் பிரசுரமாகவோ, எமது அச்சு நிறுவனத்தில் அச்சகச் சேவைகளைப் பெறுவதன் மூலமாகவோ சுவடியின் வளர்ச்சிக்கு நீங்கள் உதவலாம்.

சுவடி கருகாமல் செழிக்க, கண்ணீரும் செந்நீரும் வேண்டியதில்லை. உங்கள் திருவுளமே போதும்!

மஞ்சள் பத்திரிகையான சுவடி!

This newsletter is edited, printed and published by Palm Print Inc.
இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது